**திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர் : திரு. கு சண்முகநாதன், எம்.ஏ.,**

ந.க. 6905/2020/அ3 நாள். 22.07.2024.

| | |
|---|---|
| பொருள்: | பொதுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – தமிழ்நாடு குடிமைப் பணிகள் (கருணை அடிப்படையில் பணிநியமனம்) விதிகள் 2023 வகுக்கப்பட்டு ஆணையிடப்பட்டது – திருவாரூர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலக காவலராக பணிபுரிந்த சு.இரவிச்சந்திரன் என்பவர் 30.06.2017 அன்று பணியிடைக்காலமானது - காலஞ்சென்ற அரசு ஊழியரின் மகன் திரு.ர.விக்னேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கியது – இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. |
| படிக்கப்பட்டவை: | 1. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ 1) துறை, நாள். 23.01.2020.<br>2. அரசாணை (நிலை) எண். 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 26.02.2021.<br>3. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ–1) துறை, நாள்:08.03.2023.<br>4. அரசுக் கடித எண்.5532/G2/2023, மனிதவள மேலாண்மைத்(G) துறை, நாள்:20.09.2023<br>5. அரசுக் கடிதம் 1D எண்.850, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்:08.12.2023<br>6. அரசுக் கடிதம் (1D) எண்.900, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்:26.12.2023<br>7. அரசுக் கடிதம் (1D) எண்.13, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பணி–9(2) பிரிவு, நாள்:18.01.2024<br>8. அரசுக் கடிதம் (1D) எண்.64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்:18.01.2024<br>9. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் கடித எண்.ஆ.கு.3/4600/2024. நாள்:20.02.2024.<br>10. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள். |

** ** **

**ஆணை–**

திருவாரூர் மாவட்ட வருவாய் அலகு, திருவாரூர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலக காவலராக பணிபுரிந்து கடந்த 30.06.2017 அன்று

Scanned with OKEN Scanner

பணியிடைக்காலமான சு.ரவிச்சந்திரன் என்பவரின் மகன் **திரு.ர.விக்னேஷ்** என்பவருக்கு உரிய கல்வி, வயது மற்றும் வறியநிலைத் தகுதிகளின் அடிப்படையிலேயே, கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 1 முதல் 3-இல் காணும் அரசாணைகள், பார்வை 5 முதல் 8 வரை காணும் அரசு கடிதங்களில் பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன அலுவலரால் வழங்கப்பட்ட பணியினை ஏனைய விதிகளை பூர்த்தி செய்யும்பட்சத்தில் பார்வை 4-இல் காணும் அரசு, மனிதவள மேலாண்மைத்துறையின் கடிதத்தில் உள்ள வழிகாட்டுதல்களின்படி முடிவு செய்து உரிய செயல்முறை ஆணை பிறப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில், தனியரான **திரு.ர.விக்னேஷ் த/பெ.இரவிச்சந்திரன் (லேட்) என்பவரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 27.01.2023 முற்பகல் முதல்** பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

ஓம்/***
மாவட்ட வருவாய் அலுவலர்,
திருவாரூர்.

//ஆணைப்படி//

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
திருவாரூர்.

**பெறுநர்**

1. தொடர்புடைய நபர் (சம்பந்தப்பட்ட அலுவலர் மூலமாக).
2. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், திருவாரூர். (தனியருக்கு சார்வு செய்தும், பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டும், சார்வு செய்யப்பட்ட நகல் மற்றும் பணிப்பதிவேட்டின் நகல் ஆகியவற்றினை அனுப்பிடும் பொருட்டு)

**நகல்**

1. கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சேப்பாக்கம்,
சென்னை – 600 005.
(தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது)

2. அ3- இருக்கை பிரிவு.

Scanned with OKEN Scanner